

• டாக்டர் ரவிச்சந்திரன் (விஜயா ஹெல்த் சென்டர்)

"வாழ்க்கைமுறையையே புரட்டிப் போடுகிற சிறுநீரகச் செயலிழப்பை அதன் ஆரம்பக் கட்டத்திலேயே எப்படிக் கண்டுபிடித்துத் தவிர்க்க முடியும்?"

தன்வந்த்ரி அமைப்பின் உறுப்பினர்களில் பலருக்கும் மருத்துவ உதவி செய்து வரும் சிறுநீரக இயல் சிகிச்சை மருத்துவர் ரவிச்சந்திரனிடம் நாம் கேட்டது இந்த ஒரே கேள்வியைத் தான்.

"சிறுநீரகம் தற்காலிகமாகவும் (அக்யூட்) செயலிழக்கலாம். நிரந்தரமாகவும் (க்ரானிக்) செயலிழக்கலாம். முதல் வகைச் செயலிழப்புக்கு மாரடைப்பு, பேதி போன்றவை காரணமாக அமையலாம். இந்தக் காரணங்களைச் சரி செய்தாலே, சிறுநீரகங்களைச் செயல்பட வைக்க முடியும். நிரந்தரச் செயலிழப்பு என்பது அதிக ரத்தக் கொதிப்பு, மற்றும் தீவிர சர்க்கரை நோய் ஆகியவை காரணமாக ஏற்படக் கூடும்.

சிறுநீரகம் மெல்ல மெல்லத்தான் செயலிழக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக இதைச் சிறுநீரைக் கொண்டு கண்டுபிடிக்க முடியாது. சிறுநீரின் அளவும் அதே மாதிரி இருந்து, எரிச்சல் போன்ற எந்த அடையாளமும் தெரியாமல் இருக்கும். அதே சமயத்தில் உள்ளுக்குள் சிறுநீரகம் பழுதடைந்து கொண்டிருக்கலாம். தினமும் நூற்றி எண்பது லிட்டர் ரத்தத்தைச் சுத்தம் செய்கின்றன சிறுநீரகங்கள். வெறும் ஒன்றரை லிட்டர்தான் சிறுநீராக வெளியேறுகிறது. ஆக, சிறுநீரகம் 90 சதவிகிதம் பாதிப்படைந்திருந்தால் கூட, சிறுநீர் சாதாரணமாகவே வெளியேறலாம்.

பின் என்னதான் தடுப்பு நடவடிக்கை எடுப்பது என்கிறீர்களா? யாருக்கெல்லாம் சிறுநீரக பாதிப்பு வர வாய்ப்பு அதிகமோ (அதாவது அதிக ரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரைநோய் கொண்டவர்கள், தொடர்ந்து வலிமாத்திரைகளைப் பயன்படுத்துபவர்கள்) அவர்கள் வருடத்திற்கு ஒரு முறை சிறுநீர், ரத்தம் பரிசோதனை செய்ய வேண்டும். அதுபோல இரவில் அடிக்கடி எழுந்து சிறுநீர் கழிப்பவர்களும் சிறுநீர், ரத்தம் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். சிறுநீரில் புரதம் வெளியேறினால் உடனடி நடவடிக்கை தேவை. உடலில் முகம் (அ) கால் பகுதியில் திடீர் வீக்கம் ஏற்பட்டாலும் சிறுநீரக சிகிச்சை மருத்துவரை அணுக வேண்டும் என்றார் டாக்டர் ரவிச்சந்திரன்.

கிறது. தனி நபராகச் சென்றால், ஏதாவது ஏமாற்று வேலையோ என்று சந்தேகப்படுகிறார்கள். இதையும் மீறி கஷ்டப்பட்டு பெங்களூர், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்குச் சென்று வருகிறோம். நல்ல மனம் படைத்தவர்களின் உதவி இன்னமும் நிறைய தேவைப்படுகிறது'' என்கிறார் துவாரகநாத்.

இந்த அமைப்பின் முக்கிய நோக்கம், சிறுநீரக நோயாளிகளின் சிக்கல்களை அரசுக்கு எடுத்துச் சொல்லி தீர்வு காண்பதும்தான்.

"அரசு எங்களுக்குச் சில சலுகைகளை அளிக்க வேண்டும் என்று மன்றாடுகிறோம். சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு இவ்வளவு செலவு ஆவதற்கு முக்கியக் காரணம், அந்த அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் கருவிகள் இறக்குமதி ஆவதுதான். உள்ளூரிலேயே இந்தக் கருவிகள் தயாரிக்கப்பட்டாலும், அதிக வரிகள் காரணமாக அதன் விலை கூடிப்போய், இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளே விலை குறைவானவை என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இவற்றிற்கான கஸ்டம்ஸ் வரியை நீக்கக் கோருகிறோம்.

ரயிலில் முதல் வகுப்பில் செல்ல, ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் அதே சலுகையை, எங்களுக்கும் அளிக்க வேண்டும். நாங்கள் முதல் வகுப்பிலோ, ஏ.சி. வகுப்பிலோ செல்லும்படி இருப்பது, ஆசையினாலோ, ஆடம்பரத்துக்காகவோ இல்லை. நோய் எதுவும் தொற்றிக் கொள்ளக் கூடாது என்பதற்காக, மருத்துவர்கள் கூறும் கட்டாய நிபந்தனை இது. எனவே அரசு கருணை காட்ட வேண்டும்."

- ஜி.எஸ்.எஸ்.